
இறந்தவர்களுக்கு உயிர் தர முடியுமென்றால்.!



பழைய ஏற்பாடு,.ரிக்வேதம் வாசிக்காதே.. புதியஏற்பாடு கிறிஸ்தவர்களும்-யஜுர்வேத ஆரியர்களும் கடைபிடிக்கும் கலாச்சாரம். சொர்க்கத்திற்கு பாதை கர்மமா-ஞானமா.? நாலாயிரம் ஆண்டுகளாய் ஆரியர்களின் தீரா ஞானச்சண்டை. ஒருவன் கம்பெனி வைத்து உற்பத்தி செய்ததா உயிரும்-பொருளும்..அல்லது பிரபஞ்சத்தின் பரிணாமமா.? மத நிறுவனங் களின் அறிவு யுத்தம்.. உயிர்-பொருள் பிரபஞ்ச பரிணாமம் என முடிவாகிவிட்டாலும் களிமண் பொம்மைக்கு உயிரூட்டப்பட்டவன்தான் மனிதன் என்ற போதனை இன்னும் நிறுத்தப்படவே யில்லை. மணப்பெண்ணை தேவர்கள் கடத்தி விடுவார்களென திருமணச்சடங்கில் ஏழு தப்படி நடை சுற்றுவதும் நிறுத்தப்பட்டதாய் இல்லை.வருணனை பதவி நீக்கிவிட்டு சோமனை அரசனாக்கியதே ரிக்-யஜுரான வரலாறு. ஆதவனை (ஈகை குண மந்திரங்கள்) நீக்கிவிட்டு அசுரனை அழிப்பதும் அதன்மூலம் பொருள் பெறுவதையும் கறுப்பு,சிவப்பில் மந்திரம் ஓதுவதே யஜுர்வேதம். இளம் மனைவியின் மகிழ்வுக்காக கிழமுனிவரை தன் மருந்தால் இளமையாக் கிய கிரேக்க நாட்டு அஸ்வின்களுக்கு சோமபானம் (சாராயம்) குடிக்க இந்திரன் பாஸ் வழங்கி, தெய்வமாக்கியதும் யஜுர்வேதம்.. மனிதனை ஒற்றுமையாய் வாழ விடாமல் கால யுகங்களில் மனித உழைப்பை புதுப்புது வடிவங்களில் ஒட்டச்சுரண்டி, ஒருசிலர் பூவுலக சொர்கத்தில் மகிழ்ச்சியாய் வாழ்வதற்காக மத நிறுவனங்கள் தனக்குள் ஏற்படுத்திக்கொண்ட மாற்றங்களே இவை என்பதை மார்க்ஸ்-அம்பேத்கர்-பெரியாரை வாசிக்கும் போது அறியலாம். ஆனால் மார்க்ஸ்,ஏங்கல்ஸை வாசிக்காதே.! லெனின்,மாவோவைப் படிக்காதே.! அம்பேத்கர்,பெரியாரை ஆய்வு செய்யாதே.! பாசுவை,பாப்பாவை பின்பற்றாதே.! என்று (இவர்களின் சிந்தனை, நடைமுறைகளில் வேறுபாடுகள் இருப்பினும்) கம்யுனிஸ்டுகள் கனவிலும் எண்ணமாட்டார்கள்.

கைகேயி வரம் கேட்காவிட்டாலும் ஸ்ரீராமன் அரசாளாமல் காட்டிற்கு செல்பவர்தான். ஏனெனில் ராமனுக்கு இளமையிலேயே பிரம்மதோஷம். வசிட்ட,விஸ்வாமித்ர ரிஷிகளிடம் நாவல் கொடி பிடித்து கர்மமா-ஞானமா என்று விவாதித்தவர்.! மூத்தவன் அரசாளமாட்டான் ஜோஷ்யரின் ஆருடத்தைப்பொய்ப்பிக்கத்தம்பி இளங்கோ சமணத்துறவியாகி அண்ணனை அரியணையேற்றினார்.சிலப்பதிகாரத்தில் கண்ணகி தன்மேனியிலிருந்து பிய்த்தெறிந்தத் தீப்பந்து பசு, பிராமணர்,பெண்கள்,குழந்தைகள்,முதியோர் இவர்கள் நீங்கலாக மற்ற சாதி மக்கள், ஆடு,கோழி, நாய் உள்ளிட்ட ஜீவராசிகள் வாழும் மதுரையை எரிப்பதும், பொற்கொல்லர் குடும்பங்களை பூண்டோடு அழிப்பதும், இறுதியில் இறந்த கோவலனுக்கு உயிர் கொடுத்து கண்ணகியுடன் மலர்களைத்தூவி தேவலோகத்திற்கு அழைத்துச்செல்வதும், அஸ்வகோஷின் சமஸ்கிருத புத்தர் கதையில் இறந்த புத்தருக்கு உயிர் கொடுத்து பூக்களைத்தூவி தேவலோகத்திற்கு அழைத்துச் செல்லும் ஆரியகலாச்சார க்ளைமேக்ஸ் காட்சித் திருத்தம் போன்றதேயாகும். இறந்தவர்களுக்கு உயிர் தர முடியுமென்றால் தற்பொழுது அமேஸான் காடுகளை ஈவு இரக்கமின்றி அழித்திடும் பிரேசில் உள்ளிட்ட பூவுலக வெப்ப மிகுதிக்கு காரணமாகிய உலகின் பெருநகரங்ளில் அறிவுத்தொற்று கொரனா பரவி இறந்த பலலட்ச மக்கள் மீது பூக்களைத்தூவி ஆரியதேவர்கள் உயிர் தரலாமே.! உலகடங்கும் தேவையில்லையே.! முற்கால ஆரியர்கள் வேதமோதி நடத்தும் யாகங்களில் கொல்லப்படும் ஆயிரக்கணக்கான ஆடு-மாடு இழப்பினை தாக்குப்பிடிக்காத ஆரிய வைசியர்கள் கொல்லாமை சிந்தனையை வற்புறுத்தி ஜைன மதத்தை நிறுவியிருக்க வேண்டிய அவசியமும் இல்லையே.! எனவே ஆரியகலாச்சாரத்தை பின்தள்ளி சமண மதம் அரசமதமாக முன்னிலை வகித்தக் காலத்தில் இயற்றப்பட்ட சிலப்பதிகாரத்தில் *பொறையுடைமை குணத்துடன் கண்ணகி யாரையும் பழிவாங்காமல் ஊரையும் எரிக்காமல் ஒரு பெண்துறவியானதாகத்தான்* விட்டுத்தரும் பண்பாளரான துறவி இளங்கோ எழுதியிருக்கமுடியும்.

மனிதநேய கம்யுன் கலாச்சாரம் மக்கள் மனதில் உறைவதற்கு இன்னும் எழுதுவேன்.

-அருள்சந்-திருச்சி, 01-07-2020